**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.20/2024 |
| Deposition of Witness for | : PW – 9 |
| Name and Age | : ஜெயராமன் (வயது 63) |
| Father / Husband Name | : கோவிந்தகவுண்டர் |
| Occupation | : காவல் உதவி ஆய்வாளர் ஓய்வு |
| Village | : பரங்கிமரத்துப்பட்டி |
| Taluk | : நல்லம்பள்ளி |

**நாள்** – 18.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 to A3 absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**PW– 9**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது பரங்கிமரத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 20.09.2023ம் தேதி நான் மகேந்திரமங்கலம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியல் இருந்தபோது பாலக்கோடு அரசு மருத்துவமனையில் இருந்த கிடைத்த இண்டிமேசன் பெயரில் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த ராஜி என்பவரை முதல்நிலை காவலர் பிரபு என்பவர் விசாரித்து பெற்று வந்த வாக்குமூலத்தின் பேரில் நான் நிலைய குற்ற எண்.128/2023 சட்டப்பிரிவுகள் 294(b), 324, 323, 506(ii)–இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின் இவ்வழக்கை நான் 20.09.2023ம் தேதி 15.00மணிக்கு சம்பவ இடம் சென்று விஜய், வெங்கடேஷ் ஆகீயோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பாரவையிட்டு வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று பார்வைமகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின் சாட்சிகள் ராஜிவ்காந்தி, முருகன், நரசிம்மன், ராஜேந்திரன், பொன்ராஜ், கோவிந்தன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரிகளை கைது செய்ய தேடி சென்றபோது சி.எம்.புதூர் பேருந்து நிறுத்தம் அருகே எதிரிகள் ஆறுமுகம் மற்றும் கோவிந்தராஜ் நின்றுக்கொண்டிருந்தவர்களை கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 3–ம் எதிரி ஜெயா நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் அவரை கைது செய்யவில்லை. பின்பு ராஜீவ்காந்தி என்பவருக்கு சிகிச்சை

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.18 18:36:30 +0530

அளித்த மருத்துவர் திரு.பிரபு என்பவரை பாலக்கோடு அரசு மருத்துவமனையில் 20.10.2023ம் தேதி விசாரித்து ராஜிவ்காந்திக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று அவர் அளித்த காய்ச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு ராஜீவ்காந்தியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்த காவலர் பிரபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின் புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது 20.10.2023ம் தேதி அன்று நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

காயம்பட்ட நபர்கள் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனை சென்றார்களா என்றால் அதுபற்றி விசாரணையில் தெரிந்துக்கொள்ளவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 சம்பவத்தன்று மாரண்டஹள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை எடுத்துக்கொண்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களை கைப்பற்றவில்லை. மேற்படி ஆயுதங்களை அ.சா.1 மற்றும் அ.சா2 அடையாளம் காண்பிக்கவில்லை. ஆயுதங்களை அடையாளம் காட்டுவது சம்மந்தமாக சாட்சிகளை விசாரிக்கவில்லை. பார்வைமகஜரில் சொல்லப்பட்டுள்ள தாமோதரன் மற்றும் குடும்பத்தாரை என்பவரை சாட்சியாக விசாரித்தேனா என்றால் நினைவில்லை. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள நில உரிமையாளர்களை விசாரிக்கவில்லை. புகார்தாரர் புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், நான் சாட்சிகளை சொல்லியுள்ள விதத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்களை சொல்லியுள்ளவாறு தயாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் தயார் செய்தேன் என்றாலும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின் அசலை உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.18 18:36:37 +0530

Judicial Magistrate,
Palacode.